[27th February 1964

கனம் திரு. கோ. பூவராகன்: எத்தனை பேர்கள் வந்தார்கள், வரவில்லை என்பது கனம் அங்கத்தினருக்கே தெரியும். இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

* 98 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Information be pleased to state whether the Government have released any convicted prisoner in the Coimbatore Counterfeit case on parole?

கனம் திரு. கோ. பூவராகன்: ஆம்.

திரு. செ. மாதன்: கோவை கேஸைப் பொறுத்தவரையில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்பொழுது அரசாங்கத்தைக் கலந்து ஆலோசிக்கப்பட்டதா? அல்லது அதிகாரிகளே தங்கள் இஷ்டத்திற்கு விடுதலை செய்தார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: விடுதலை என்பது வேறு. இது பரோலைப் பொறுத்தது.

MR. SPEAKER : Who is authorised to release?

திரு. செ. மாதவன்: கோவை கேஸைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் படாமலே அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களா? அரசாங்கம் என்றால் 'அமைச்சர்' என்ற பொருளில் கூறினேன். அரசாங்கத்தின் கவனத்திற்கு இது வந்திருக்க வேண்டும். அமைச்சருக்குத் தெரியுமா, தெரியாதா என்பது கேள்வி.

MR. SPEAKER : My question is who is authorised to release?

SRI S. MADHAVAN : Home Department has to pass an order for release.

MR. SPEAKER : After this clarification only, the question is clear.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த வழக்கில் சம்பந்தப்பட்டு தண்டனை அடைந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். விடுதலை செய்யப்பட்டவர்கள் யார்? என்ன காரணத்திற்காக விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: விடுதலை என்பதில்லை. கிருஷ்ணன், பெரியசாமி என்ற ஒருவரும் பரோலில் விடப்பட்டிருக்கிறார்கள். கிருஷ்ணன் இரண்டு மாத காலத்திற்கு வீட்டிலே இருக்கிற காரியங்களைக் கவனிப்பதற்கும், மனைவியின் உடல் நிலை சரியில்லாத காரணத்திற்காகவும் பரோலில் விடப்பட்டிருக்கிறார். பெரியசாமியைப் பொறுத்தவரையில், மூன்று தடவை பரோலில் விடப்பட்டிருக்கிறார். பரீட்சை எழுதுவதற்காகவும், அவருடைய தாய் உடல் நலம் சரியாக இல்லாததால் அதைக் கவனிப்பதற்காகவும்.

27th February 1964]

திரு. து. ப. அழகமுத்து : இந்த கேஸை நடத்திய போலீஸ் காரர் பரோலில் விடுவது குறித்து ஆட்சேபித்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அது போன்ற தகவல் என்னிடம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : இம்மாதிரி பரோலில் விடுவதற்கு முன்பு கேஸ் நடத்திய போலீஸ்காரரை கலந்து ஆலோசிப்பதுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சர்க்கார் முடிவு செய்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசியல் காரணத்திற்காகவோ அல்லது பாதுகாப்பு விதிகளின் கீழோ தண்டனை கொடுக்கப்பட்டவர்களுக்கு பரோலில் விடும்பொழுது அரசியல் காரியங்களில் ஈடுபடக் கூடாது என்ற நிபந்தனை விதிப்பதுபோல, இருவருக்கும் பரோலில் இருக்கும்போது கள்ள நோட்டு அடிக்கக்கூடாது என்று நிபந்தனையின் பேரில் (சிரிப்பு) அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறாரா ?

கனம் திரு. கோ. பூவராகன் : பரோலில் விட அந்த மாதிரி நிபந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவரைக் கண்காணிப்பது போலீஸின் பொறுப்பு.

திரு. மு. கருணாநிதி : இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர் பரோலில் விடப்பட்டிருப்பது வீட்டுக் கணக்கு வழக்குகளை பார்ப்பதற்கு என்று பத்திரிகைகளில் படித்தோம். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது மனைவியின் உடல் நிலை காரணமாக என்று சொல்கிறார்கள். இதில் எது சரி என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : அவர்கள் பரோலில் விடப்பட்டிருப்பது குடும்ப விவகாரங்களை கவனிப்பதற்கு என்ற தகவல் தான் என்னிடம் இருக்கிறது.

Highways Research Station

* 99 *Q.*—Sri K. CHEEMAICHAMY (on behalf of Sri P. K. MOOKIAH THEVAR) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) The name of the person who is in charge of the Directorate of the Highways Research Station, Madras ; and

(*b*) the nature of work done by him?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Sri K. Ramaswamy Reddy.

(*b*) The Director of the Highways Research Station **is** in charge of applied Research on Highway Engineering and Traffic Engineering. His chief function is providing expert knowledge to the field Engineers of the Department in charge of various structural construction works and **road works**.